**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8073036

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம் : Coimbatore PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 1/19/AC/CB Date: நாள் 3.1.2019

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a) & (b)
   (ii) Act சட்டம்: Act 1988 as amended by the Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : Act 2018

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 24.12.2018 Date to : நாள் வரை 28.12.2018
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31.12.2018 Time : நேரம் 19.00hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 31.12.2018 Time : நேரம் 19.00hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer tamil typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Deivam calibration Accuracy, No.266, Ramaiah Nagar, Selvarajapuram Coimbatore, 25 km South East approximately
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. Ponnees Selvam (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Kuppanna Gounder
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 50/18 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் Calibration Accuracy Agency (g) Address : முகவரி 5/7E, Santhanalekshmi Nagar, Bharathipuram, Sinthamanipudur Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Smt. K. Vijayalekshmi, Deputy Inspector of Labour, Dr. Balasundaram Road, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

---

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ---

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ---

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 3.1.2019

[signature] 3.1.2019

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
03.1.2019 16.30hrs

Name: பெயர் K. SASIKALA
Rank: நிலை Inspector No. எண் .........
V&AC, Coimbatore

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 1 / 2019/ AC/ CB, u/s 7(a) & (b) of Prevention of Corruption Act 1988 as Amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி

31.12.2018 ம் தேதி திங்கட்கிழமை மாலை 1900 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை சிந்தாமணிபுதூர் போஸ்ட், பாரதிபுரம், சந்தான லட்சுமி நகர், க.எண்.5/7E குப்பண்ணகவுண்டர் மகன் K.பன்னீர்செல்வம், வயது-50 என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கோயம்புத்தூர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்தார்.

அந்த புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகாரில் சொல்லப்பட்டதுபோல் புகார்தாரரிடம் திருமதி.விஜயலட்சுமி கொள்திறன் சான்று வழங்க வேண்டி டேங்கர் லாரிகளின் கொள்ளளவுக்கேற்பவும், போக்குவரத்து செலவுக்காகவும் லஞ்சமாக பணம் கேட்டு பெற்று வந்தது தெரிகிறது. மேலும் புகார்தாரரின் முன்நடத்தை மற்றும் புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் அவரது புகார் நம்பகதன்மை கொண்டது என்றும் தெரியவந்ததால் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 03.01.2019 ம் தேதி 1500 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 1/2019/AC/CB, u/s 7(a) & (b) of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு:-

31.12.2018 அனுப்புனர் K.பன்னீர்செல்வம், வயது-50, த/பெ. குப்பண்ணகவுண்டர், க.எண்.5/7E, சந்தான லட்சுமி நகர், பாரதிபுரம், சிந்தாமணிபுதூர் போஸ்ட், கோவை. பெறுநர் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கோயம்புத்தூர். அய்யா, நான் சொந்தமாக கோவை சிந்தாமணிபுதூர் (அஞ்சல்), செல்வராசபுரம், எண்.266, ராமையா நகரில் தெய்வம் காலிபிரேசன் அக்யூரசி என்ற நிறுவனத்தை கடந்த 15 வருடமாக நடத்தி வருகிறேன். இந்த நிறுவனத்தை நடத்துவதற்கு நான் அரசாங்கத்திலிருந்து உரிமம் எண்.2156/2003 ஐ பெற்றுள்ளேன். திரவ வகைகள் எடுத்து செல்லும் டேங்கர் லாரிகளை எங்கள் நிறுவனத்தில் காலிபிரேசன் செய்து தொழிலாளர் துணை ஆய்வாளர் அவர்களால் அளந்து சரிபார்த்து முத்திரையிட்டு கொள்திறன் சான்று வழங்கப்படும். இந்த கொள்திறன் சான்று ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு சான்று செய்யப்பட்டிருந்தால் மட்டுமே எண்ணெய் நிறுவனங்களிலிருந்து டேங்கர் லாரிகள் மூலம் எண்ணெயை எடுத்து செல்ல முடியும். என் நிறுவனத்திற்கு கொள்திறன் சான்று பெறுவதற்கு வரும் டேங்கர் லாரிகளின் விவரங்களை காலிபிரேசன் செய்த பின்னர் தொழிலாளர் துணை ஆய்வாளர் திருமதி.விஜயலட்சுமி, பாலசுந்தரம் ரோடு, கோவை அவர்களுக்கு எனது தொலைபேசி எண்கள் 9842234005, 9965534005 லிருந்து தொடர்பு கொண்டு விவரத்தை

தெரிவிப்பேன். அதன் பேரில் அவர் எனது அலுவலகத்திற்கு நேரில் வந்து மேற்படி டேங்கர் லாரிகளின் விவரங்கள் அடங்கிய விண்ணபத்தை பெற்றுகொண்டு லாரியின் கொள்ளளவுகளை சரிபார்த்து அந்த லாரிக்கு அரசு நிர்ணயித்த கட்டணத்தொகைகளான 5,000 லிட்டருக்கு முத்திரை கட்டணம் ரூ.393/- வீதம், 4,000 லிட்டருக்கு முத்திரை கட்டணம் ரூ.323/- வீதம் , 3,000 லிட்டருக்கு முத்திரை கட்டணம் ரூ.253/- வீதம், 2,000 லிட்டருக்கு முத்திரை கட்டணம் ரூ.183/- வீதம் மற்றும் ஒரு டேங்கர் லாரிக்கு பயணக்கட்டணம் ரூ.100/- பெற்று அதற்கான ரசீது மற்றும் சான்றிதழ் நெம்பர் உடன் கூடிய Certificate of Verification என்ற கொள்திறன் சான்று வழங்குவார். மேலும் அவர் கொண்டுவரும் அரசு முத்திரை மற்றும் நெம்பரை டேங்கர் லாரிக்கான டிப் ராடில் பதிவு செய்து டேங்கர் லாரிக்கு வழங்கப்படும். கொள்திறன் சான்று பெறுவதற்காக வேண்டி வந்திருந்த 20,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டேங்கர் லாரிகள் TN 04 AF 8367, TN 59 BA 0151 மற்றும் TN 03 J 6348 க்கு காலிபிரேசன் செய்து மேற்படி விவரத்தை தொழிலாளர் துணை ஆய்வாளர் திருமதி.விஜயலட்சுமி அவர்களுக்கு 24.12.2018 ஆம் தேதி செல்போனில் தெரிவித்தேன். அதன்படி அன்றைய தினமே என் நிறுவனத்திற்கு வந்தார். மேற்படி டேங்கர் லாரி வாகன எண்.TN 04 AF 8367 க்கு அரசு கட்டணமாக ரூ.1,672/-ம், TN 03 J 6348 க்கு அரசு கட்டணமாக ரூ.1,672/- ம், TN 59 BA 0151 க்கு அரசு கட்டணமாக ரூ.1,672/- ம், அவரிடம் செலுத்தி ரசீதும், கொள்திறன் சான்றும் பெற்று கொண்டேன். அப்போது திருமதி.விஜயலட்சுமி தனக்கு தனியாக 10,000 லிட்டர் முதல் 12,000 லிட்டர் வரை டேங்கர் லாரிக்கு ரூ.1,500/- ம், 16,000 லிட்டர் முதல் 20,000 லிட்டர் வரை உள்ள டேங்கர் லாரிக்கு ரூ.2,500/- ம், 25,000 லிட்டர் முதல் 30,000 லிட்டர் வரை உள்ள டேங்கர் லாரிக்கு ரூ.3,000/- ம் மற்றும் அவர் வரும் வாகனத்திற்கு ஒவ்வொரு முறை வரும்போது ரூ.700/– ம் தரவேண்டும் என்று கண்டிப்பாக சொல்லி இந்த லாரிகள் 20,000 லிட்டர் கொள்ளளவு உள்ளதால் ரூ.2500/– வீதம் ரூ.7500/– மும் போக்குவரத்து செலவு ரூ.700/– ம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.8,200/- கொடுக்க வேண்டும் என்று கராராக கூறினார். அப்போது நான் அதற்கும் நீங்கள் ரசீது கொடுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் ரசீது தரமுடியாது என்று கோபித்து கொண்டு சென்றுவிட்டார். மேலும் கொள்திறன் சான்று பெறுவதற்காக வேண்டி வந்திருந்த 16,000 லிட்டர் மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டேங்கர் லாரிகள் முறையே TN 38 BW 0565 மற்றும் TN 38 F 6606க்கு காலிபிரேசன் செய்து மேற்படி விவரத்தை தொழிலாளர் துணை ஆய்வாளர் திருமதி.விஜயலட்சுமி அவர்களுக்கு 27.12.2018 ஆம் தேதி செல்போனில் தெரிவித்தேன். அப்போது அவர் ஏற்கனவே நான் பணத்தை கேட்டபோது நீங்கள் கொடுக்க மறுத்து விட்டீர்கள் அதனால் நீங்கள் கூப்பிடும் போதெல்லாம் வரமுடியாது இப்போது உங்களிடம் உள்ள வாகனங்களுக்கு சான்று வழங்குவதற்கு அரசு கட்டணம் அல்லாமல் ரூ.4700/–ம் 24.12.2018 ம் தேதி நீங்கள் கொடுக்க மறுத்த ரூ.8200/– ஆக மொத்தம் ரூ.12,900/– கொடுப்பதாக இருந்தால் உடனே வருகிறேன் இல்லையென்றால் எப்போது நேரம் கிடைக்கிறதோ அப்போது வருகிறேன் என்று கூறினார். சான்று வழங்க தொழிலாளர் துணை ஆய்வாளர் உடனே வராவிட்டால் என்னுடைய வாடிக்கையார்களுக்கு உடனுக்குடன் சான்றுபெற்று தர இயலாத சூழ்நிலை ஏற்படும் என்பதாலும் அதனால் அவர்கள் அடுத்தமுறை வேறு இடத்திற்கு செல்ல கூடிய நிலை ஏற்படும் என்பதாலும் எனது தொழில் பாதிக்கப்படும் என்பதாலும் நான் அவர் கேட்ட பணம் கொடுக்க ஒத்துக்கொண்டதால் அன்றையதினம் என் நிறுவனத்திற்கு திருமதி.விஜயலட்சுமி வந்தார்.

மேற்படி டேங்கர் லாரிகளில் வாகன எண் TN 38 BW 0565க்கு அரசு கட்டணமாக ரூ.1,392/-ம், TN 38 F 6606க்கு அரசு கட்டணமாக ரூ.929/- ம், செலுத்தி ரசீதும் கொள்திறன் சான்றும் பெற்று கொண்டேன். பின்னர் அவர் ஏற்கனவே கேட்ட பணம் ரூ.12,900/— கொடுங்கள் என்று கேட்டார். எனக்கு வேறு வழி தெரியாததால் நான் அவர் கேட்ட லஞ்ச பணம் ரூ.12,900/— ஐ கொடுத்தேன். மேலும் கொள்திறன் சான்று பெறுவதற்காக வேண்டி வந்திருந்த 12000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டேங்கர் லாரி எண்.TN 67 K 6429 க்கு காலிபிரேசன் செய்து மேற்படி விவரத்தை தொழிலாளர் துணை ஆய்வாளர் திருமதி.விஜயலட்சுமி அவர்களுக்கு 28.12.2018 ஆம் தேதி செல்போனில் தெரிவித்தேன். அன்றைய தினமே என் நிறுவனத்திற்கு வந்தார். மேற்படி டேங்கர் லாரிக்கு அவரிடம் அரசு கட்டணமாக ரூ.1,069/- செலுத்தி ரசீதும் கொள்திறன் சான்றும் பெற்று கொண்டேன். பின்னர் அவர் ஏற்கனவே அவர் சொல்லியிருந்த கணக்கின்படி அன்றைய லஞ்சபணம் ரூ.2200/— ஐ கட்டாயபடுத்தி கேட்டு வாங்கிக்கொண்டார். இவ்வாறு ஒவ்வொரு முறையும் என் நிறுவனத்திற்கு வரும் வாகனங்களுக்கு காலிபிரேசன் செய்த பின்பு தொழிலாளர் துணை ஆய்வாளர் திருமதி.விஜயலட்சுமி அவர்கள் சான்று வழங்க என் நிறுவனத்திற்கு வரும்போது அவருக்கு போக்குவரத்து செலவுக்கு ரூ.700/—ம் டேங்கர் லாரிகளின் அளவுக்கேற்ப லஞ்ச தொகையும் கொடுக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு முறையும் எனது நிறுவனத்திற்கு வரும் வாகனங்களுக்கு கொள்திறன் சான்று பெறுவது சம்மந்தமாக தொழிலாளர் துணை ஆய்வாளர் திருமதி.விஜயலட்சுமி அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பமில்லை. ஒவ்வொரு முறையும் கொள்திறன் சான்றுக்காக வேண்டி லஞ்சம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அடுத்தமுறை எனது நிறுவனத்திற்கு டேங்கர் லாரிகள் வந்தவுடன் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு நேரில் வந்து எங்கள் அலுவலகத்திற்கு வந்த டேங்கர் லாரிகளையும் அதற்கான அரசு கட்டணம் மற்றும் லஞ்ச பணத்துடன் கொடுக்க வேண்டிய விவரத்தினையும் தெரிவிக்கிறேன். அப்போது அவர் ஏற்கனவே நிர்ணயித்துள்ள லஞ்ச பணத்தை என்னிடம் கேட்டு பெறும்போது அவரை பிடித்து அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு,(ஒப்பம்) K.பன்னீர்செல்வம், 31.12.2018. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயமுத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து, வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

(signature) 31.1.2019
(K.சசிலேகா)
காவல்ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.